செ.வெ.எண்: 244/2017 நாள்: 30.03.2017

**கன்னியாகுமரி காந்தி மண்டபத்திற்கு வருகை தரும் பொது மக்களின் காலணிகளை பாதுகாத்து,**
**கட்டணம் வசூலிக்கும் உரிமம் பெற 03.04.2017-ல் ஏலம் விடப்படும்.**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் காந்தி மண்டபத்திற்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அவர்களது காலணிகளை பாதுகாத்து, ஜோடி ஒன்றிற்கு ரூ.1/- வீதம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை ஓராண்டு காலத்திற்கு வழங்குவதற்கான ஏலம், ஏப்ரல் மாதம் 3-ஆம் தேதி (03.04.2017) அன்று மாலை 3.00 மணிக்கு, மாவட்ட ஆட்சியரக அலுவலக வளாகத்தில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவர்கள் முன்வைப்பு தொகையாக ரூ.1,000/- செலுத்தி கலந்து கொள்ளலாம். ஏலம் முடிந்தவுடன் முன்வைப்புத்தொகை திருப்பி கொடுக்கப்படும். ஏலத்தில் அதிகபட்ச தொகைக்கு ஏலம் எடுக்கும் நபர் ஏலத்தொகையில் பாதியை ஏலம் எடுத்தவுடன் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை ஏலம் எடுத்த ஒரு வார காலத்திற்குள் செலுத்த வேண்டும்.

மேலும், ஏலம் குறித்த நிபந்தனைகளுக்கு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.